**தனி அலுவலர், புதுவள்ளூர் ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), கடம்பத்தூர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை:திருமதி.கே.சாந்தி**

**ந.க.எண்:3030/2018/அ6** **நாள்:05.02.2018**

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு – திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம் - கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - புதுவள்ளூர் ஊராட்சி - நயப்பாக்கம் கிராமம் - குடியிருப்பு மனைப்பிரிவு - D.T.C.P. தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - எண்.ம.வ/ந.ஊ.உ.இ(திவம)எண்.182/2017- இறுதி ஒப்புதல் வழங்குதல்.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.71, ஊரக வளர்ச்சித் (C2) துறை, நாள்:16.06.2003.
2. அரசாணை (நிலை) எண்.79, ஊரக வளர்ச்சித் Housing and Urban Development (UD4(3)) Dept., நாள்:04.05.2017.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொ.), திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.189/2017/திவம2, நாள்:21.12.2017.
4. புதுவள்ளூர் ஊராட்சி தீர்மான எண்.65, நாள்:24.01.2018.

*****

**உத்தரவு:**

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுவள்ளூர் ஊராட்சி, நயப்பாக்கம் கிராமத்தில் சர்வே எண்கள்.276/1A,1B1,1B2 Pt, 1B3 Pt, 1B5, 2, 3 Pt, 5 Pt, 277/6, 7,8,9,10,11, 278/1, 2,3,4,5,10,11,12,13, 295/10, 11 Pt, 12A Pt, 12B Pt, 296/1 Pt, 5A Pt-ல் 8.63 ஏக்கரில் அமையவுள்ள "குடியிருப்பு மனைப்பிரிவிற்கு" நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களால் "ம.வ/ந.ஊ.உ.இ (திவம)எண்.182/2017" என்ற எண்ணில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவு 375923 சதுர அடி பரப்பில் அமைந்துள்ளது. இதில் 145 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 47 EWS மனைகள் (27368 சதுர அடி), விற்பனைக்குரிய பகுதியாக கடை (4634 சதுர அடி) மற்றும் சமுதாயக்கூடம் (19796 சதுர அடி) ஆகியவை ஒதுக்கப்பட்டுள்ளன.

இம்மனைப்பிரிவில் உள்ள 110253 சதுர அடி பரப்பளவுள்ள 16 சாலைகள், 663 சதுர அடி பரப்பளவுள்ள மூலை முடக்குகள் மற்றும் 38305 சதுர அடி பரப்பளவுள்ள 7 பூங்காக்கள் சேர்த்து மொத்தம் 149221 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் புதுவள்ளூர் ஊராட்சிக்கு தானப்பத்திரப்பதிவு எண்.1270/2017, நாள்.06.06.2017ல் தானமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்விவரம் புதுவள்ளூர் ஊராட்சி தீர்மானம் எண்.16, நாள்:16.06.2017-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

..2..

இம்மனைப்பிரிவிற்குக் கீழ்க்கண்ட விவரப்படி மனைப்பிரிவு உரிமையாளரால் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

நன்னிலை வரியாக ரூ.45000/- அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவின் சந்தை மதிப்பில் 3% தொகை ரூ.5,18,000/- உரிய அரசுத் தலைப்பில் கருவூலச் செலுத்துச்சீட்டு எண்.219/31.01.2018-ன்படி செலுத்தப்பட்டுள்ளது. கூராய்வுக் கட்டணம் ரூ.1000/- மற்றும் வளர்ச்சிக் கட்டணம் சேர்த்து மொத்தம் ரூ.61200/- புதுவள்ளூர் ஊராட்சிக்கு பல்வகை வரவு இரசீது எண்.51634, நாள்: 04.01.2018ன்படி செலுத்தப்பட்டுள்ளது. கொடிநாள் நிதி பெயரில் தொகை ரூ.10000/- பேங்க் ஆப் பரோடா, திருவான்மியூர் வங்கி வரைவு எண்.343728, நாள்:18.01.2018-ல் பெறப்பட்டுள்ளது.

இவ்விவரங்களின் அடிப்படையில் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கிட பார்வை 4ல் காணும் புதுவள்ளூர் ஊராட்சித் தீர்மானத்தின்படி ஊராட்சி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**கீழ்க்கண்ட நிபந்தனைகள் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும்:**

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொ.), திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.189/2017/திவம2, நாள்:21.12.2017-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்படவேண்டும்.
2. மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற கோப்பு எண்.ந.க.எண்.189/2017/திவம2, நாள்:21.12.2017-ல் குறிப்பிட்ட 1 முதல் 28 மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்படவேண்டும்.
3. மனைப்பிரிவின் சந்தை மதிப்பில் 3% தொகை செலுத்தியதில் வித்தியாசத் தொகை ஏதேனும் செலுத்தவேண்டியது பின்னர் அறியப்பட்டால் அதனை செலுத்த வேண்டும்.

**இணைப்பு :**

1. நிபந்தனைக் கடித நகல்கள்
2. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம்-1

**தனி அலுவலர், புதுவள்ளூர் ஊராட்சி/**
**வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)**
**கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்**

**பெறுநர்:**

M/s.Casa Grande Realtors Private Limited,
NPL Devi, 3rd Floor, New No.111, Old No.59,
LB Road, Thiruvanmiyur, Chennai- 600 041.

**நகல்:**

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
   திருவள்ளூர் மண்டலம், எண்.43/397A, 2வது தளம்,
   அன்னை இந்திரா காந்தி சாலை, இராஜாஜிபுரம் பகுதி-2,
   திருவள்ளூர்- 602001.
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்.
3. வட்டாட்சியர், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
4. தனி அலுவலர், புதுவள்ளூர் ஊராட்சி (வரைபடம்-1 இணைப்பு)